இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், நேற்று (04.01.2025) இராயபுரம் மண்டலம், வார்டு57க்குட்பட்ட வால்டாக்சாலை ஜட்காபுரம் பகுதியில் துறைமுகம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ், ரூ.1.07 கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ள புதிய பல்நோக்கு கட்டடத்தினை பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தனர். இந்நிகழ்ச்சியில் மேயர் திருமதி ஆர்.பிரியா, வடக்கு வட்டார துணை ஆணையர் கட்டா ரவி தேஜா, மண்டலக் குழுத் தலைவர் பி. ஸ்ரீராமுலு, மண்டல அலுவலர் டாக்டர் தா. ஃபரிதா பானு, மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சென்னை அண்ணா பல்கலைக்கழக மாணவி பாலியல் வழக்கு: துணை ஆணையர் புக்யா சினேகா தலைமையில்

அனைத்து மகளிர் சிறப்புப் புலனாய்வுக்குழு அமைப்பு விசாரிக்கும்!

சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவு! தமிழ்நாடு அரசு செய்தி வெளியீடு!

சென்னை, ஜன.5-

சென்னை உயர்நீதிமன்றத்தின் உத்தரவுபடி, சென்னை அண்ணா பல்கலைக்கழக மாணவி மீதான பாலியல் துன்புறுத்தல் தொடர்பான வழக்குகளை விசாரிக்க, சென்னை அண்ணா நகர் துணை ஆணையாளர் மருத்துவர் புக்யா சினேஹா (இ.கா.ப.) தலைமையில் அனைத்து மகளிர் சிறப்புப் புலனாய்வுக் குழு (SIT) அமைக்கப்பட்டது. இந்த சிறப்புப் புலனாய்வுக் குழு, இவ்வழக்குகளில் தற்போது விசாரணை மேற்கொண்டு வருகிறது.

இதனிடையே, சில செய்தி ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகங்கள், சிறப்புப் புலனாய்வுக் குழுவின் விசாரணையில் கிடைக்கப்பெற்ற தகவல்கள் / முன்னேற்றங்கள் எனக் கூறி சில கருத்துக்களை பொதுவெளியில் ஒளிபரப்பி/ பிரசுரித்து வருகின்றன. குறிப்பாக, "எதிரி ஒரு சாரிடம் பேசியதாக சிறப்புப் புலனாய்வுக் குழுவிடம் பாதிக்கப்பட்ட பெண் தெரிவித்ததாகவும்", சிறப்புப் புலனாய்வுக் குழுவானது, பாதிக்கப்பட்ட பெண் தொடர்பான ஆபாச பதிவுகள் கொண்ட மின்னணு உபகரணங்களை எதிரியிடமிருந்து பறிமுதல் செய்துள்ளதாகவும்", "திருப்பூரை சேர்ந்த ஒரு நபரும் இதில் எதிரியாக அடையாளம் காணப்பட்டுள்ளார்" என்பன உள்ளிட்ட ஆதாரமற்ற தகவல்கள் வெளியிடப்படுகின்றன.

எனினும், இவ்வழக்குகளின் விசாரணையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து சிறப்புப் புலனாய்வுக் குழுவோ, சம்பந்தப்பட்ட அதிகாரிகளோ எந்த ஒரு அறிக்கையோ, கருத்தோ எந்த ஒரு தனிநபருக்கோ அல்லது ஊடகத்திற்கோ தெரிவிக்கவில்லை என்பது இதன் மூலம் தெளிவுபடுத்தப்படுகிறது. இவ்வழக்குகள் தொடர்பான சிறப்புப் புலனாய்வுக் குழுவின் விசாரணையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் என பொது வெளியில் தற்போது பரப்பப்பட்டு வரும் தகவல்கள் முற்றிலும் தவறானவை மற்றும் எவ்வித அடிப்படை ஆதாரமும் இல்லாதவையாகும்.

சிறப்புப் புலனாய்வுக் குழுவின் விசாரணை பற்றிய இத்தகையை ஆதாரமற்ற மற்றும் ஊகத்தின் அடிப்படையிலான தகவல்கள், பொதுமக்களிடையே குழப்பத்தை ஏற்படுத்துவதுடன், இவ்வழக்குகளில் சுதந்திரமான மற்றும் நியாயமான விசாரணையையும் பாதிக்கக் கூடும்.

இவ்வழக்குகளின் தீவிரத்தன்மை மற்றும் விசாரணையின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு, ஊடகங்கள், தனி நபர்கள், சமூக ஊடகவியலாளர்கள் உள்ளிட்டோர் இவ்வழக்கு விசாரணை தொடர்பாக ஊகங்களின் அடிப்படையில் செய்திகள் வெளியிடுவதை தவிர்த்திடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறான தவறான தகவல்கள், சம்பந்தப்பட்ட நபர்களுக்கு கடுமையான பின்விளைவுகளை ஏற்படுத்துவதுடன், புலன் விசாரணையின் நம்பகத்தன்மையை யும் பாதிக்கக் கூடும்.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. - ஜெ.ஜெ.எபினேசர் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

பெரம்பூர் 44 வது வட்டத்தில் இளைஞர் அணி உறுப்பினர் சேர்த்தல்!

ஆர்.டி.சேகர் துவக்கி வைக்கிறார்! த. ஆறுமுகம் தலைமை!

சென்னை,ஜன,5,

கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கேற்ப,கழக இளைஞர் அணிச் செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுரைப் படி,சென்னை வடக்கு மாவட்டம், பெரம்பூர் தெற்குப் பகுதி,44வது வட்டத்தில்,இல்லந்தோறும் இளைஞர் அணி உறுப்பினர் சேர்க்கும் நிகழ்ச்சி, மாவட்டப் பொறுப்பாளர் திரு.ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. தலைமையில் இன்று (5.1.2024) காலை 9 மணிக்கு கஸ்தூரிபாய் காந்தி தெரு திருப்பூர்குமரன்தெருவில் நடைபெற உள்ளது.

வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜே.ஜே.எபினேசர், எம்.ஏல்.ஏ. தெற்குப் பகுதிச் செயலாளர் க.ஜெயராமன், பொறியாளர் அணி துணைச் செயலாளர் இரா. நரேந்திரன், மாவட்டப் பொருளாளர் வி.தயாளன், மாமன்ற உறுப்பினர் நிதிக் குழுத் தலைவர் திருமதி. சர்ப ஜெய தாஸ், பகுதித் தலைவர்.மு.சாகுல் அமீது, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் வை. கௌதமன், தெற்குப் பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் கூல் ஜோன், C.சுரேஷ் மற்றும் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், மாநில, மாவட்ட நிர்வாகிகள்,

வட்டச் செயலாளர்கள், மாவட்டப் பிரதி நிதிகள், வட்டக்கழக நிர்வாகிகள், மாவட்ட, பகுதி, அனைத்து அணி நிர்வாகி கள், BLA 2,பாக இளைஞர் அணி உறுப்பினர்கள், கழக முன்னோடிகள் அனைவரும் இந்நிகழ்ச்சியில் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறேன்.

இவ்வாறு வட்டச் செயலாளர் த.ஆறுமுகம் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

திருப்பெரும்புதூர் வடக்கு ஒன்றியக் கழக அவசரச் செயற்குழுக் கூட்டம்!

ஒன்றியக் கழகச் செயலாளர் எஸ்.டி.கருணாநிதி அறிக்கை!

காஞ்சிபுரம், ஜன. 5

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், திருப்பெரு மந்தூர் வடக்கு ஒன்றியம், தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை முன்னிட்டு கழகத் தோழர்களுக்கு பொங்கல் பரிசு அளிக்கும் விழா மற்றும் ஒன்றியக் கழக அவசரச் செயற்குழுக் கூட்டம் மாவட்டக் கழகச் செயலாளரும், சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆணைக்கிணங்க, இன்று (5.1.2025 ஞாயிற்றுக்கிழமை) காலை 9.00 மணி அளவில், சேந்தமங்கலம் கிராமம், கலைஞர் திடலில் தளபதி அரங்கில் (J.P.hotel அருகில்) நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் திருப்பெரும்புதூர் வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளரும், திருப்பெரும்புதூர் யூனியன் சேர்மனுமான எஸ்.டி.கருணாநிதி தலைமையில் கூட்டம் நடைபெறுகிறது.

எனவே திருப்பெரும்புதூர் வடக்கு ஒன்றியக் கழகத்திற்குட்பட்ட மாவட்ட, ஒன்றிய, வார்டுக் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், மற்றும் துணை அமைப்பாளர்கள், மாவட்ட கவுன்சிலர், ஒன்றிய கவுன்சிலர், ஊராட்சி மன்றத் தலைவர்கள் மற்றும் கிளைக் கழகச் செயலர்கள், கழக முன்னோடிகள் அனைவரும் தவறாமல் குறிப்பிட்ட நேரத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு திருப்பெரும்புதூர் வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் எஸ்.டி.கருணாநிதி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

கழகத் தலைவர் – முதல்வர் ஆணைக்கிணங்க மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆலோசனைப்படி, எழும்பூர் வடக்கு பகுதி செயலாளர் சொ.வேலு.எம்.சி முன்னிலையில் 77 (அ) வட்டம் 51, 54, 55 ஆகிய மூன்று பாகங்களில் பொது மக்களின் குறைகளை வட்டச் செயலாளர் வி.அபாய், காங்கிரஸ் கட்சி மாமன்ற உறுப்பினர் பு.சுமதி ஆகியோர் வீதிவீதியாகச் சென்று குறைகளைக் கேட்டனர். இந்நிகழ்வில் கே.வள்ளி, டி.கே.விஜயராஜ், ஜி.ராஜா, எம்.ஆர்.சரவணன், அ.சிவக்குமார், சத்திய வாணி, மோ.அருண், பாகமுகவர்கள் பி.சரண்யா, பொன்மொழி, எ.பிரகாஷ், கே.தங்கரூபன், கலை, ரீயாஸ்பாய், மகா.சதிஷ், லோகேஷ் மற்றும் அரசு அதிகாரிகள், மாநகராட்சி பணியாளர்கள், ஊழியர்கள், கழக உடன்பிறப்புகள் பங்கேற்றனர்.

தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பில்

திருப்பூர் மாவட்டத்தில் கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள்!

மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ் அறிவிப்பு!

திருப்பூர், ஜன.5-

தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பில் திருப்பூர் மாவட்டத்தில் 202425 ஆம் ஆண்டிற்கு ஆன மாவட்ட நிலையில் 11, 12ஆம் வகுப்பு பயிலும் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கிடையேயான கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் நடத்திப் பரிசுகள் வழங்கபடவுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ் அறிவித்துள்ளார்.

திருப்பூர் மாவட்டத்தில் 11, 12ஆம் வகுப்பு பயிலும் பள்ளி, கல்லூரி மாணவர்களிடையே பேச்சாற்றலையும், படைப்பாற்றலையும் வளர்க்கும் நோக்கில் ஆண்டுதோறும் தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் மாவட்டம் வாரியாக கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் நடத்தப்பெற்று பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

திருப்பூர் மாவட்டத்தில் 11, 12ஆம் வகுப்பு பயிலும் பள்ளி மாணவ, மாணவியர்களிடையேயான கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் 21.01.2025 ஆம் நாளன்றும், கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களிடையேயான கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் 22.01.2025ஆம் நாளன்றும் எல்.ஆர்.ஜி அரசு மகளிர் கல்லூரிக் கூட்டரங்கில் காலை 10 மணி முதல் நடைபெறவுள்ளன.

இப்போட்டியில் கலந்து கொள்ளும் பள்ளி மாணவ, மாணவியர்கள் முதன்மைக் கல்வி அலுவலர் வழியாகவும், கல்லூரிப் போட்டிகளில் கலந்து கொள்ளும் மாணவ, மாணவியர்கள் பெயர்ப்பட்டியல் கல்லூரிகளின் முதல்வர்கள் வழியாகவும் பின்வரும் முகவரியில் நேரில் / அஞ்சலில் அல்லது ddtamil607@gmail.com என்ற மின்னஞ்சல் மூலம் 16.01.2025ஆம் நாளுக்குள் அனுப்பி வைக்கவேண்டும். ஒவ்வொரு பள்ளி, கல்லூரிகளில் இருந்து கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகளில் ஒவ்வொருப் போட்டிக்கு ஒருவர் வீதம் மொத்தம் 3 மாணவர்கள் மட்டும் கலந்து கொள்ளலாம். போட்டிகளுக்குரிய தலைப்புகள் போட்டி தொடங்குவதற்கு முன்னர் மாணவர்களுக்கு அறிவிக்கப்படும்.

ஒவ்வொரு போட்டிக்கும் முதல்பரிசு ரூ.10,000/, இரண்டாம் பரிசு ரூ.7,000/ மூன்றாம் பரிசு ரூ.5,000/ வீதம் மொத்தப் பரிசுத் தொகையாக ரூ.66,000/ காசோலையாக வழங்கப்படும் என மாவட்ட ஆட்சித் தலைவர் தா.கிறிஸ்துராஜ் தெரிவித்துள்ளார்.

தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு தமிழ்நாடு முழுதும் உள்ள

அரசு அலுவலகங்கள் - பொதுத்துறை நிறுவனங்கள் - பள்ளி - கல்லூரிகள் ஜன. 17 அன்று விடுமுறை!

தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, ஜன.5

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு தமிழ்நாடு முழுவதும் உள்ள அனைத்து அரசு அலுவலகங்கள், பொதுத்துறை நிறுவனங்கள், பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் அனைத்து கல்வி நிறுவனங்களுக்கும் 17.01.2025 அன்று விடுமுறை அறிவிக்கப்படுகிறது.

இது குறித்து தமிழ்நாடு அரசு அறிவிப்பு வருமாறு:-

இவ்வாண்டு தமிழ்நாட்டில் 14.01.2025 செவ்வாய்கிழமை அன்று தைப் பொங்கல் பண்டிகை கொண்டாடப்படுவதாலும், 15.01.2025, 16.01.2025, 18.01.2025 மற்றும் 19.01.2025 ஆகியவை அரசு விடுமுறை நாட்கள் என்பதாலும் மாணவர்கள், அவர்தம் பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் தங்களது சொந்த ஊருக்குச் சென்று பண்டிகையை மகிழ்வுடன் கொண்டாடும் வகையில், அதற்கு இடைப்பட்ட நாளான 17.01.2025 (வெள்ளிக்கிழமை) அன்று தமிழ்நாடு முழுவதும் உள்ள அனைத்து அரசு அலுவலகங்களுக்கும் உள்ளூர் விடுமுறை அறிவிக்குமாறு பலதரப்பிலிருந்து அரசுக்கு கோரிக்கைகள் வரப்பெற்றன.

அக்கோரிக்கைகளை ஏற்று, முதலமைச்சர் அவர்கள், மாணவர்கள், அவர்தம் பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் தங்களது சொந்த ஊர் சென்று பொங்கல் பண்டிகையை கொண்டாடும் வகையில், 17.01.2025 (வெள்ளிக்கிழமை) அன்று தமிழ்நாடு முழுவதும் உள்ள அனைத்து அரசு அலுவலகங்கள், பொதுத்துறை நிறுவனங்கள், பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் அனைத்து கல்வி நிறுவனங்களுக்கும் உள்ளூர் விடுமுறை அளித்தும், அவ்விடுமுறையை ஈடு செய்யும் வகையில், 25.01.2025 (சனிக்கிழமை) அன்று பணி நாளாக அறிவித்தும் உத்தரவிட்டுள்ளார்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

கே.பி. முரளி கிருஷ்ணன் ஏற்பாடு! பி.எம்.பிருந்தா ஸ்ரீ எம். சி. தலைமை! ஆலந்தூர் வடக்குப் பகுதி

160வது வட்டத்தில் சமத்துவப் பொங்கல் - மாபெரும் கோலப் போட்டி!

ப. குணாளன் - என்.சந்திரன் - கோல்டு பிரகாஷ் முன்னிலை!

2 ஆயிரம் பேருக்கு பரிசுகளை அமைச்சர் தா.மோ. அன்பரசன் வழங்குகிறார்! ஆர்.எஸ்.பாரதி பங்கேற்பு!

சென்னை, ஜன.5

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், ஆலந்தூர் வடக்குப் பகுதி 160-வது வட்ட தி.மு.க. சார்பில் தமிழர் திருநாள் சமத்துவ பொங்கல் விழாவை முன்னிட்டு மாபெரும் கோலம் போட்டி 160 ஆவது வட்டச் செயலாளர் கே. பி.முரளி கிருஷ்ணன் ஏற்பாட்டில், பி.எம். பிருந்தா ஸ்ரீ எம்.சி. தலைமையில் இன்று (05.01.2025 ஞாயிற்றுக்கிழமை) மதியம் 1:30 மணி அளவில் ஆலந்தூர் புது தெரு ஆர்.டி.ஓ. ஆபீஸ் அருகில் நடைபெறுகிறது.

பகுதிச் செயலாளர்கள் பா. குணாளன், என். சந்திரன் எம்.சி. மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்டு பிரகாஷ் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

எம்.வி குமார், வி. ராஜா, எஸ்.சகிம்சா, ஏ.ஆர். ஸ்ரீதர் ரூபன், தமிழ்ச்செல்வன், ஆர். எஸ். சரவணன் ஆகியோர் வரவேற்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா.மோ. அன்பரசன் கலந்து கொண்டு 2000 பேருக்கு பரிசுகளை வழங்குகிறார்.

கழக அமைப்புச் செயலாளர் ஆர். எஸ்.பாரதி, எம். எஸ்.கே.இப்ராஹிம், ஆர். டி. பூபாலன், ரா.பாஸ்கரன் சாய் ஜெயகாந்த், ஆர்.ஆர்.ஜெயராம் மார்த்தாண்டன், கே. ஆர். ஆனந்தன், கலாநிதி குணாளன் உள்ளிட்ட அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கழகத்தினர் பங்கேற்கின்றனர்.

கீதா ஆனந்தன், வி. பாரதி, எஸ். அமுதப்பிரியா, எஸ். ரேணுகா, ஜெ. பூங்கொடி, ஜே. தேவி, என். துர்கா தேவி, தமிழ் செல்வி ஆகியோர் போட்டியின் நடு வர்களாக பங்கேற்கின்றனர்.

க.சாந்தி, விமலா காமராஜ், சே. விக்கி, ஆர் கார்த்திக், எஸ். ஷரிப் கான் நன்றி உரையாற்றுகின்றனர்.

தேதி மாற்றம்

தி.மு.க. மாணவர் அணி மாவட்ட, மாநில அமைப்பாளர்கள் கூட்டம்! 09.01.2025 அன்று நடைபெறுகிறது!

தி.மு.க. மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன், எம்.எல்.ஏ. அறிவிப்பு!

தி.மு.க. மாணவர் அணியின் மாவட்ட, மாநில அமைப்பாளர்கள் கூட்டம், வருகிற 09-01-2025 வியாழக்கிழமை, மாலை 04.30 மணியளவில், சென்னை, அண்ணா அறிவாலயத்தில், எனது தலைமையில், மாநில மாணவர் அணித் தலைவர் இரா.ராஜீவ்காந்தி இணைச் செயலாளர்கள் சி. ஜெரால்டு, எஸ். மோகன் மற்றும் துணைச் செயலாளர்கள் மன்னை த. சோழராஜன், சேலம் ரா. தமிழரசன், அதலை பி. செந்தில்குமார், கா. அமுதரசன், பி.எம். ஆனந்த், கா. பொன்ராஜ், வி.ஜி. கோகுல், திருமதி பூர்ணசங்கீதா, திருமதி ஜெ. வீரமணி ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது.

அதுபோது மாவட்ட, மாநில, அமைப்பாளர்கள் மட்டும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் :

1) கல்லூரிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள தமிழ் மாணவர் மன்றத்தின் நிரப்பப்பட்ட உறுப்பினர் விண்ணப்பப்படிவம் மற்றும் நிர்வாகிகள் பட்டியல் ஒப்படைத்தல்;

2) அணியின் சார்பாக மாவட்ட அளவில் நடத்தப்பட்ட நிகழ்ச்சிகள் மற்றும் செயல்பாடுகள் குறித்த மினிட் புத்தகம் ஆய்வு;

3) மாணவர் அணி ஆக்கப் பணிகள் குறித்து.

"அண்ணா அறிவாலயம்,"
சென்னை.
நாள்: 04.01.2025

சி.வி.எம்.பி. எழிலரசன், எம்.எல்.ஏ.
செயலாளர்,
தி.மு.க. மாணவர் அணி

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

பம்மல் நல்லதம்பி
சனவரி 5 (2016)

தந்தை பெரியார் – பேரறிஞர் அண்ணா ஆகியோரின் பகுத்தறிவுக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு, 1963ஆம் ஆண்டு கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்.

ஒருங்கிணைந்த செங்கற்பட்டு மாவட்டத்தில், சைதை வட்டக் கழகச் செயலாளராக 1968 முதல் 1972 வரை கழகப் பணியாற்றியவர்.

பம்மல் பேரூராட்சித் தலைவராக இரண்டு முறையும் – பரங்கிமலை ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவராகவும் – பம்மல் நகர்மன்றத் தலைவராகவும் பணியாற்றியவர்.

1980ல் கழகத்தின் சார்பில் தாம்பரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர். குறிப்பாக, நெருக்கடிகால மிசா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.